# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 28481235

டிடிவி தினகரன்

பொதுச்செயலாளர்


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 24.01.2024

## தலைமைக் கழக அறிவிப்பு

### தூத்துக்குடி மாநகர் - தூத்துக்குடி வடக்கு - தூத்துக்குடி தெற்கு மாவட்டம்

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், **தூத்துக்குடி மாநகர்**, **தூத்துக்குடி வடக்கு** மற்றும் **தூத்துக்குடி தெற்கு** என கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டுவரும் தூத்துக்குடி மாவட்டத்தின் நிர்வாக வசதிகளுக்காக **"தூத்துக்குடி மாநகர்"** மற்றும் **"தூத்துக்குடி புறநகர்"** என இரண்டு கழக மாவட்டங்களாக மறுசீரமைக்கப்பட்டு, அதற்குண்டான சட்டமன்றத் தொகுதிகளைக் கீழ்காணுமாறு உள்ளடக்கி செயல்படும்.

### தூத்துக்குடி மாநகர் மாவட்டம்

1. தூத்துக்குடி சட்டமன்றத்தொகுதி
2. விளாத்திக்குளம் சட்டமன்றத்தொகுதி
3. கோவில்பட்டி சட்டமன்றத்தொகுதி

### தூத்துக்குடி புறநகர் மாவட்டம்

1. திருச்செந்தூர் சட்டமன்றத்தொகுதி
2. ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத்தொகுதி
3. ஓட்டப்பிடாரம் சட்டமன்றத்தொகுதி

<u>**தூத்துக்குடி மாநகர் மாவட்ட கழக செயலாளராக**</u>

**திரு.T.விர்ஜின் ஆரோக்கிய பிரைட்டர்** அவர்களும்,

(தூத்துக்குடி மாநகர் மாவட்டக் கழக செயலாளர்)

<u>**தூத்துக்குடி புறநகர் மாவட்ட கழக செயலாளராக**</u>

**திரு.பா.ஜானியேல் சாலமோன் மணிராஜ்** அவர்களும்,

(கழக மாணவர் அணி இணைச்செயலாளர்)

இன்று முதல் நியமிக்கப்படுகிறார்கள்.

இதுவரை கழக மாணவர் அணி இணைச்செயலாளர் பொறுப்பிலிருக்கும் திரு.பா.ஜானியேல் சாலமோன் மணிராஜ் அவர்கள் அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

மேலும், தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் பொறுப்பிலிருக்கும் திரு.A.சிவபெருமாள், தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் பொறுப்பிலிருக்கும் திரு.P.R.மனோகரன் ஆகியோர் அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். அவர்கள் கழக அமைப்பு செயலாளர் பொறுப்பில் தொடர்ந்து செயலாற்றுவார்கள்.

கழக அமைப்பு ரீதியாக தற்போது மறுசீரமைக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகளும், கழக உடன்பிறப்புகளும், சம்மந்தப்பட்ட மாவட்ட கழக செயலாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி கழக பணிகளை ஆற்றிடவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

கழகம் மற்றும் சார்பு அமைப்புகளுக்கு நிர்வாகிகள் நியமனம் செய்யப்படும் வரை, தற்போதுள்ள நிர்வாகிகள் சம்மந்தப்பட்ட மாவட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகப் பொறுப்பில் தொடர்ந்து செயலாற்றுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டிடிவி தினகரன்**